Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2035 மாசி -03 15-02-2004 ஞாயிற்றுக்கிழமை ஓசை -362

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கனினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ் சாலை, கிளிநொச்சி.
R.V பந்தல் சேவை, (சி-8689) தர்மபுரம்.

# தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கு அதிகளவு வெளிநாட்டவருக்கு அழைப்பு!

## தேர்தல் ஆணையாளர் திணைக்களம் அறிவிப்பு

**எதிர்வரும் பொதுத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக அதிகளவு வெளிநாட்டவர்களை நாட்டுக்கு வரவழைப்பது என தேர்தல் ஆணையாளர்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

உதவி தேர்தல் ஆணையாளர் k.சேனாநாயக்க இது தொடர்பில் கூறுகையில் பங்களதேஷ், பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள், ஆசிய தேர்தல் அதிகாரசபை ஆகியவற்றில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் வரவழைக்கப்படவுள்ளனர். இதனடிப்படையில் சுமார் 250 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தேர்தல் திணைக்களத்தில் இலங்கைக்கு அழைக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் திணைக்களம் கண்காணிப்பாளர்களை அனுப்பக் கோரி ஆசிய நாடுகள் சபையிடம்விண்ணப்பித்த போதிலும் பாதுகாப்பு சபையின் அனுமதி கிடைக்காமையால், ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்கள் எவரும் தேர்தல் வேளையில் சமுகம் அளிக்க மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக சுமார் 21 ஆயிரம் கண்காணிப்பாளர்களை நாடளாவிய ரீதியில் ஈடுபடுத்தப் போவதாக Peffara பெபாரா அமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை பொதுத் தேர்தல் வாக்குப் பதிவின் போது அந்து மீறல்கள் இடம்பெறுமானால் குறிப்பிடப்பட்ட வருக்கு சாவடியின் வாக்குப் பதிவை ரத்துச் செய்யப்போவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் உதவியுடன் அரசாங்கம் அமைக்க வேண்டாம்
### சிஹலஉறுமய கோரிக்கை

அரசாங்கம் அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியை நாடவேண்டாம் என சிஹல உறுமய கேட்டுள்ளது.

இது தொடர்பில் சிஹல உறுமய விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவைக் கொண்டு அரசாங்கம் ஒன்றை அமைத்தால் இலங்கையில் தமிழ் ஈழம் உருவாவது நிச்சயம் அல்லது அந்தக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அரசாங்கமானது இடம்தரவேண்டியிருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நேரடி பிரதிநிதிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெறும் வாய்ப்பு இந்த முறை தேர்தலால் உருவாக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம், மூதூர், மட்டு, மாத்தறையில் தேர்தல் கண்காணிப்புக் குழு கிளைகள் இயங்கும்

(கொழும்பு)

சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு யாழ்ப்பாணம், மூதூர், மட்டக்களப்பு, மாத்தறை ஆகிய நகரங்களில் தனது பிராந்திய காரியாலயங்களை அமைத்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போதுதமது கண்காணிப்பு பணியை மேற்கொள்ளவென வருகைதரவுள்ள வெளிநாட்டு பிரஜைகளில் 15 பேர் வருகை தந்துள்ளதாகவும் அவர்களுள் 7பேர் மேற்படி பகுதிகளில் கடமையாற்றுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இவ்வமைப்பு சகல தேர்தல் தொகுதிகளிலும் அவ்வப் பகுதிகளிலுள்ள மதப்பெரியோர்கள், வணிகர்கள், கல்விமான்கள் போன்றோர்களில் தெரிவு செய்யப்பட்ட குழுவினரை இப்பணிகளுக்கு நியமித்துள்ளது.

இக் குழுவினர் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அம்பாறை மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் தமது பணிகளை மேற்கொள்வர்.

## சனாதிபதியின் சனநாயக விரோத நடவடிக்கைகள் முற்றுப்பெறாது
### -அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

சனாதிபதியின் சனநாயக விரோத நடவடிக்கைகள் இத்துடன் முற்றுப்பெற்றுவிடும் என்பதற்கில்லை. அது தொடரும். இதை நாம் நம்புகின்றோம். எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் வியாழக்கிழமை கூறியுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு எதிர்வரும் 17 ஆம் திகதி அமெரிக்க வாஷிங்டனில் நடைபெறவுள்ளது. இதில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆறுஅம்சத்திட்டத்தை ஏற்கும் எந்தக்கட்சியுடனும் சேரத்தயார்
### -சிறீ முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

6அம்சத்திட்டங்களை முன்வைத்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் கசன்அலி கூறியுள்ளார். இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் எந்தவொரு பெரிய கட்சியுடனும் சேர்ந்த 9 மாவட்டங்களில் போட்டியிடத்தயார். என அவர் மேலும் தெரிவித்தார்.

தன்னுடைய கட்சி எதிர்காலத்தில் சமாதான பேச்சு வார்த்தையில் தனித்தரப்பாக பங்கு பற்றுவது 6ஆம்சத்திட்டங்களில் ஒன்றாகும் இது சம்பந்தமாக பெரிய கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக கசன் அலிதெரிவித்தார்.

வரவிருக்கும் பொதுத்தேர்தலில் 13 மாவட்டங்களில் சிறிலங்கா

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் ஐக்கியம், பாதுகாப்பு என்பன மக்கள் ஆணையிலேயே தங்கியுள்ளது
### - அநுரா பண்டாரநாயக்க

(கொழும்பு)

நாட்டில் ஐக்கியம், பாதுகாப்பு என்பன எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் அளிக்கும் ஆணையில்தான் தங்கியுள்ளதென அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

நேற்று வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐ.தே. முன்னணி 2001 ஆம் ஆண்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதென்றும் ஐ.தே.முன்னணி மக்களுக்குத் தெரியாமலே நாட்டை பிளவுபடுத்துவதற்கான திட்டமொன்றில் ஈடுபட்டதெனவும் கூறியுள்ள அநுராபண்டாரநாயக்க, ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு அமைச்சர்களுக்கு எதிராகவும் புதிய கூட்டமைப்பு அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்.

நாம் இதுவரை ஆளும் கட்சி அமைச்சர்களில் பெரும்பாலானவர்களுக்கு எதிராக ஊழல் மற்றும் லஞ்ச விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளோம். எமது கூட்டமைப்பின் கீழ் நிறுவப்படும் எதிர்கால ஆட்சியில் ஊழல் மற்றும் லஞ்ச மோசடிகளில் ஈடுபடுகின்ற அமைச்சர்களுக்கு எதிராக உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அது, நானாகயிருந்தாலும் எந்த மன்னிப்பும் இன்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அநுரா மேலும் தெரிவித்துள்ளார்.

## சனாதிபதி சந்திரிகா மீது அமைச்சர் அஸ்வர் கண்டனம்

(கொழும்பு)

முஸ்லிம் ஜும்மாக்குச் செல்லும் தினமான ஏப்ரல் 2ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதன் மூலம் சனாதிபதி மீண்டும் ஒரு முறை முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாட்டை மேற்கொண்டிருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

புத்தளம் நகரப்பகுதியில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்; ஏற்கனவே சனாதிபதி சிறுபான்மையினருக்கு, எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தார்.

தீபாவளி தினத்தன்று அரசாங்கத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியல் தயார்?

(திருகோணமலை)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியல் பெரும்பாலும்பூர்த்தியாகிவிட்டதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் இவ்வாறும் திருகோணமலை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவர். இப் பட்டியலில் அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோ) மற்றும் ஈழமக்கள் புரட்சிக்கர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி) ஆகியவற்றின்சார்பில் பட்டிய

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

12.02.2004அன்று முல்லை மாவட்டத்தில் சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

இரகுநாதன் காசிப்பிள்ளை கார்த்திகேயன்(சொ.இடம்- அம்பாள் வீதி,நாயன்மார்கட்டு,யாழ்ப்பாணம். தற்.இடம்- விசுவமடு) என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள்வீரவணக்கம்செலுத்துகின்றனர்.

## தேர்தல் தொடர்பாக புலிகளின் கருத்தறிவதில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு முயற்சி

(வடமராட்சி)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் கருத்துக்களை நாடி பிடித்தறிவதில் யோர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் முற்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் குடாநாட்டின் சில பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகங்களிற்கு சென்றுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ் அலுவலக பிரதிநிதிகள் இது தொடர்பாக கேட்டறிந்துள்ளதாக தெரியவருகின்றது.

குறிப்பாக விடுதலைப்புலிகள் தரப்பு எதிர்வரும் பொதுத்தேர்தல் சுமுகமாக இடம்பெற ஒத்துழைப்புக்களை வழங்குவது பற்றியே அவர்கள் வினாவியுள்ளனர். அத்துடன் தற்போதைய சூழலில் மக்கள் தேர்தல் தொடர்பான எந்தவித மனக்கருத்துக்களைக் கொண்டுள்ளனர் என்பது பற்றியும், தேர்தல் தினத்தன்று வாக்களிப்புக்கள் சுமுகமாக இடம்பெறுமா? என்பது பற்றியும் இது தொடர்பாக விடுதலைப்புலிகளது கருத்துக்களை கண்டறிந்து கொள்வதுமே அவர்களது நோக்கமாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (27)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

மல்லாவியில் புகழேந்தி நகரில் (1ஆம் யூனிற்) நமணங்குளத்தில் வீடு கிணற்றுடன் கூடிய 1 1/4 ஏக்கர் தென்னம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு து. சிரேஸ்கரன் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. T.P. 0602213215, T.P. 0712373352. (4235)

### தவறிவிட்டது

மோர் றேட் வெள்ளவத்தையைச் சேர்ந்த கந்தையா ராஜேந்திரம் என்பவரது பயணப்பை தவறிவிட்டது. இதில் முக்கியமான ஆவணங்கள் உள்ளன. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். அ.யேசுதாசன் 252/3 முரசுமோட்டை பரந்தன். (4239)

### தவறிவிட்டது

கடந்த 11.02.2004 அன்று கொக்காவில் வீதி மல்லாவிக்கும் புதுக்குடியிருப்புக்குமிடையில் செல்வநாயகம் சுபாஸ்கரன் என்னும் முகவரி இடப்பட்ட கொம்பியூட்டர் வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மல்லாவிமுத்துப்பிள்ளையார்வண்ணச் சோலையிலோ,அல்லது,முத்துப் பிள்ளையார்வண்ணச்சோலை கிளிநொச்சியிலோ ஒப்படைக்கவும். (7158)


-வடமராட்சி கிழக்கில்-

# 10 கிராமசேவகர் பிரிவிற்கு தென்னங்கன்று விநியோகம்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடமராட்சிக்கிழக்கு பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 10 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மக்களுக்கும் மூவிங்வென் நிறுவனம் குடும்பத்திற்கு 07 தென்னம்பிள்ளைகளையும் 07 மரமுந்திரி கன்று வீதமாக 10, கிராமசேவையாளர் பிரிவில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கியுள்ளது. (11)


## உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்,உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகோட்)

## நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி
## ஆ அவ கடன் இல:- 1846 சிறி (எஸ்எவ்)
## திருகோணமலை மாவட்ட நிருமாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்-இல.06

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிருமாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்துத் தொழில் தருனராகக் குறிப்பிடப்படும், NECORD திட்டத்தின், திட்டப் பணிப்பாளர் சார்பாகத் திருகோணமலை மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

## அட்டவணை

| தொ இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | TC/NECORD/ED/30 | எத்தபெண்டிவேவ சிங்கள வித்தியாலயத்தில் 100'x25' பாடசாலையின் கட்டட நிருமாணம், பாடசாலை கட்டட திருத்த வேலை, மலசல கூடத்தின் திருத்தவேலை ஆகியவற்றிற்கான நிருமாணம். | M7 | 23,000 |
| 02 | TC/NECORD/ED/31 | மகாடிவுல்வேவ வித்தியாலயத்தின் 40'x20' விஞ்ஞான ஆய்வு கூடத்தின் நிருமாணம். | M8 | 8,000 |
| 03 | TC/NECORD/ED/32 | சிங்கபுர வித்தியாலயத்தின் 40'x20' விஞ்ஞான ஆய்வுகூடத்தின் நிருமாணம். | M9 | 9,000 |
| 04 | TC/NECORD/HS/05 | திருகோணமலை, சேருவிலவில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகு தொகுதியுடன், வைத்திய அதிகாரியின் விடுதி நிர்மாணம். | M6 | 72,000 |
| 05 | TC/NECORD/HS/24 | திருகோணமலை கும்புறுபிட்டியில் மத்திய மருந்தகம் மற்றும் கிராமிய வைத்திய அதிகாரியின் விடுதி நிர்மாணம். | M6 | 59,000 |
| 06 | TC/NECORD/AG/06 | திருகோணமலை குச்சவெளியில் விவசாய போதனாசிரியர் அலுவலகம் மற்றும் விடுதி மீள் நிர்மாணம். | M7 | 21,000 |
| 07 | TC/NECORD/RD/03 | திருகோணமலை முள்ளிப்பொத்தானை கிஜ்ரா வீதியில் இணை பாலத்தின் நிருமாணம். | M7 | 26,000 |
| 08 | TC/NECORD/RD/06 | திருகோணமலை, எத்தபெண்டிவேவவில் பிரதான வடிகால் அமைப்பின் பாலம் மீள் புனரமைப்பு. | M8 | 18,000 |
| 09 | TC/NECORD/RD/07 | திருகோணமலை, கோமறங்கடவெலவிலிருந்து ரண்மரிய உல்பத்து வரையான வீதி மேம்படுத்தல். | M8 | 9,000 |
| 10 | TC/NECORD/IR/03 | திருகோணமலை மயிலவேவ நீர்த்தாங்கி மற்றும் வடிகால் அமைப்புப் புனரமைப்பு. | M7 | 26,000 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்விகள் கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

i. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (இக்டாட்டுடன் M7 க்கு மேலாகப் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

iii. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான செயற்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

iv. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

v. ஒப்பந்தகாரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

vi. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

4. இதன் தொடர்பாக பந்தி இரண்டில் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி சமர்ப்பிக்க முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமைய வேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை (NECORD) கருத்திட்டத்தின் கீழ் மூன்றாக விளங்கும். தற்போது கேள்வி முடிவுத்திகதியன்று செயற்படுத்தப்படும் வேலைகளும் இதில் உள்ளடக்கப்படும்.


(6ஆம் பக்கம் பார்க்க)

# பிளவு பட்ட சைப்பிரஸை ஒன்றிணைக்கும் ஐ.நா.சபையின் சமரசத் திட்டம் ஏற்பு

## நியூயோர்க் கூட்டத்தின் இறுதியில் இணக்கம்

**பிளவுபட்டுள்ள சைப்பிரஸை ஒன்றிணைப்பதற்காக ஐக்கிய நாடுகள் சமர்ப்பித்து சமரசத்திட்டத்தை சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.**

மே மாதம் முதலாம்திகதி ஐரோப்பிய சமூகத்தில் சைப்பிரஸ இணைந்து கொள்வதற்காக முதல்நடவடிக்கையாகப் பிளவு பட்டுள்ள அந்நாட்டை ஒன்றிணைக்கும் ஐ.நா.திட்டத்தை சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் ஏற்றுக்கொண் டுள்ளனர்

நியூயோர்க்கில் ஐ.நா.சபை செயலர் கொபி அனான் தலைமையில் மூன்றுநாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சைப்பிரஸ் தலைவரும் துருக்கிய சைப்பிரஸ் தலைவரும் கொபி அனானின் சமரசத்திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சைப்பிரஸில் இனஅடிப்படையிலான இரண்டுவலயங்களை கொண்டசமஷ்டியும் மத்தியில் அரசாங்கமொன்றும் அமைக்கப் பட வேண்டுமென்று கொபி அனான் கூறியுள்ளார்.

இதற்கு இரண்டு சைப்பிரஸ் தலைவர்களும் ஒத்துக் கொண் டுள்ளார்கள்.முன்னதாக செவ்வாய்க் கிழமை பூர்வாங்க பேச்சுவார்த்தை எந்தவொரு பெறுபேறுகளையும் பெறாததினால் அடுத்த நாளும் கலந்துரையாடலை தொடர்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் தலைமையில் சைப்பிரஸ் சனாதிபதி கபரோ கொலஸ்கும் துருக்கிய சைப்பிரஸ் தலைவர் டெங்கிஷாசும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண் டனர். 1974ம்ஆண்டில் துருக்கிய ராணுவத்தினர் சைப்பிரசின் வடபகுதியை ஆக்கிரமிப்பதைத் தொடர்ந்து அந்த நாடு இரு பிரிவுகளாக பிளவுபட்டது. சைப்பிரஸின் 40வதம் பகுதி துருக்கியின் கட்டுப்பாட்டில இருந்தது குறிப்பிடத்தக்கது.

## இராணுவ அதிகாரி கைது!

ஒஸாமா பின்லேடன் தலைமையிலான குழுவிற்குத் தகவல் வழங்க முற்பட்டதாகக் கூறப்படும் குற்றச் சாட்டில் அமெரிக் கப்படையதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க இராணுவ இரகசியங்களைத் தெரிவிக்க முற்பட்டதோடு பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.



அண்மையில் ஈராக்கில் பாக்தாத் நகரில் பொலிஸ் நிலைய மருகில் நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் காயமுற்ற தனது மகனை வைத்திய சாலைக்கு கொண்டு விரையும் ஈராக்கியர்.

# பங்களாதேஷ் அரசை அகற்ற போராட்டம் நாட்டின் பொருளாதார நிலை பாதிப்பு!

(டாக்கா)

பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் பகிஷ்கரிப்பு, ஆர்ப்பாட்டம், புறக் கணிப்புக்களால் நாட்டின் பொருளாதாரம் குறிப்பாக பங்குச் சந்தை நிலவரம் வீழ்ச்சியை நோக்கிச் செல்வதாக அந்நாட் டின் வர்த்தக சமூகம் கவலை வெளியிட்டுள்ளது.

பங்களாதேஷில் நேற்று இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் காரணமாக சிட்டக்கொங் துறைமுகம் ஸ்தம்பித நிலையடைந்துள்ளது.

பங்களாதேஷில் மூன்று நாட்களில் இரண்டு வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. வியாழக்கிழமை நடந்த வேலை நிறுத்தத்தின் போது பொலிசார் கொடூரமான தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனை எதிர்த்தே நேற்று இரண்டாவது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டுள்ளது.

டாக்காவில் பயணிகள் பேருந்து ஒன்று உட்பட நான்கு வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை நடத்தப்பட்ட பொலிசாரின் தாக்குதலில் 100ற்கும் மேற்பட்ட கட்சித் தலைவர்கள் காயமடைந்துள் ளார்கள்.

பிரதமர் பேகம்ஹையாயிஷா பதவியிலிருந்து நீக்கப் பட வேண்டுமென்றும் பொதுத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டு மென்றும் எதிர்க்கட்சி கோரியுள்ளது.

சட்டமும் ஒழுங்கும் கடைப்பிடிக்கப்படவில்லையென்றும் படுகொலைகள் ஆட்கடத்தல்கள் அதிகரித்துள்ளன என்றும் எதிர்க்கட்சித் தலைவா குற்றம் சாட்டியுள்ளார்.

இரண்டு வருடமாக பிரதமராக இருக்கும் பேகம்ஹையாயிஷாவின் ஆட்சி கலைக்கப்பட வேண்டுமென்றும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.



ஈராக்கில் அடிக்கடி குண்டுத்தாக்குதல்கள் நடைபெறுவதால் டிக்ரிட் வீதியில் குண்டுகளைத் தேடி சோதனையில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர்.

## நடைமுறையில் இறுக்கம்

(இஸ்லாமாபாத்)

கலைவிழாக்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக பாகிஸ்தான் அமைப்புக்களால் அழைக்கப்படும் இந்தியர்களுக்குப் புதிய சட்டதிட்டங்களை பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் செல்ல இருக்கும் இந்தியர்கள் இதற்கான படிவத்தில் விஸா மனுவுடன் சேர்த்து பாஸ்போட் நகல் ஒன்றையும் இணைத்து, பயணத்திற்கு குறைந்தது எட்டு வாரங்களுக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று அறிவித்துள்ளது.

# உள்நாட்டுப் போர் உருவாகும் வாய்ப்பு ஈராக்கில் உள்ளது

## - ஐ.நா. எச்சரிக்கை

ஈராக்கில் உள்நாட்டுப் போர் ஒன்று உருவாகும் வாய்ப்பு உள்ளதாக ஐ.நா.சபை கவலை வெளியிட்டுள்ளது.

தேர்தலை வெகுவிரைவில் நடத்துவது சாத்தியமில்லை. ஆனால் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படுமானால் அங்கு உள்நாட்டுப் போர் மூளலாம் என்று ஐ.நா. சபையின் ஈராக்கிற்கான பிரதிநிதி எச்சரிக்கை செய்துள்ளார்.

இதனால்தான் ஈராக்கில் முன்னதாகவே தேர்தல் நடத்தும் சாத்தியம் இல்லையென்று ஐ.நா. சபை கூறிவருகின்றது. ஈராக்கிய அரசு கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று ஈராக்கிலுள்ள 60 சதவீத ஷியா முஸ்லிம்கள் கூறி வருகின்றனர் என்பது தெரிந்ததே.

# சர்வசன வாக்கெடுப்பிற்கு கட்டுப்பட வெனிசுவெலா சனாதிபதி மறுப்பு

வெனிசுவெலாவில் தொடர்ந்தும் சனாதிபதி பதவியில் இருப்பது குறித்து சர்வசனவாக்கெடுப்புக்கு விடுவதென்று தேர்தல் ஆணையம் தீர்மானிக்குமானால் அந்தத் தீர்ப்புக்கு எதிராக தாம் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்போவதாக சனாதிபதி ஷிபோல் ட்ராவி அறிவித்துள்ளார்.

தேர்தல் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் பொய்யானவை என்றும் ஒருவரே பல பத்திரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும்பொய்யான கையொப்பங்கள் இடப்பட்டுள்ளதாகவும் சனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

உயர் நீதிமன்றம் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென்று தீர்ப்பு வழங்குமானால் அதனை தான் ஏற்றுக்கொண்டு சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவது உறுதி எனவும் கூறியுள்ளார்.

## மக்களவைத் தேர்தல் அட்டவணை மாத இறுதியில் வெளியாகும்

(புதுடில்லி)

பாராளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையை இம்மாதம் கடைசி வாரத்தில் தேர்தல் ஆணையகம் முடிவுசெய்யவுள்ளதாகவோ இந்தியத் தேர்தல் ஆணையர் இளங்கோ கோபால்சுவாமி கூறியுள்ளார். திருச்சி வந்துள்ள தேர்தல் ஆணையர் பல்வேறுமாநில மற்றும் மத்தியரசு அதிகாரிகளுடன் தொடர்ச்சியான ஆலோசனைக் கூட்டங் களுக்கு தேர்தல் ஆணையகம் ஏற்பாடு செய்துள்ளதாகவும், இம்மாத கடைசி வாரத்தில் தேர்தலுக்கான ஆயத்தப்பணிகளை முடிவுசெய்ய முடியும் என்றும்கூறியுள்ளார்.

# இரு தரப்புப் பேச்சுக்களை ஆரம்பிக்க இஸ்லாமாபாத்தில் நாளை கூடி ஆராய்வு

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தை நாளை திங்கட்கிழமை இஸ்லாமாபாத்தில் தொடங்கப்படவுள்ளது.

இரு நாடுகளிடையேயும் விரிவான பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வழிமுறைகள் குறித்த விவாதம் திங்கட்கிழமை முதல் தொடங்கவுள்ளது.

இடைச் செயலர்கள் இடையிலான இருநாட்கள் கூட்டத்தைத் தொடர்ந்து புதன்கிழமை வெளியுறவுச் செயலர்களின் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

ஷியாச்சின், காஷ்மீர் உட்படப் பல பிரச்சினைகள் இந்த விரிவான பேச்சுக்களில் அங்கம் வகிக்கும்.

இஸ்லாமாபாத் கூட்டத்திற்குப் பின்னர் இரு நாடுகளிடையே நடைபெறக்கூடிய விரிவான பேச்சுக்களில் தீர்க்கப்படக்கூடிய விடயங்கள் குறித்து, திங்கட்கிழமைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

## பொடோ வழக்கு தள்ளுபடி மகாராஸ்ரா அரசு முடிவு

(புதுடில்லி)

மகாராஸ்ராவில் பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட 29 பேர் மீதான வழக்கை தள்ளுபடி செய்ய மகாராஸ்ரா அரசு முடிவு செய்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் வழக்குகளை ஆராயு மாறு உயர்மட்ட பொடோ மறுஆய்வுக்குழு பரிந்துரைத்ததையடுத்தே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டதாக மாநில உள்துறை அமைச்சர் கூறியுள்ளார். மகாராஸ்ராவில் சோலாப்பூரியில் சென்றவருடம் நடந்த கலவரத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்ட 29 பேரும் பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



காசா முனையில் இஸ்ரேலிய இராணுவத்தால் தகர்க்கப்பட்ட வீடொன்றைப் பார்வையிடும் பலஸ்தீனர்கள்.

# களத்தில் பா.ஜ.க-காங்கிரஸ் வெல்லப்போவது யார்?

இந்தியாவின் பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் களைகட்டத் தொடங்கியுள்ளது "ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பது போல தேர்தல் ஆணையகத்தின் ஆயத்தங்கள் முதல் கட்சிகள் பிரச்சார நடவடிக்கை வரை அனைத்துமே தேர்தலுக்கு முன்பு மும்முரமாக இந்திய அரசியலை ஆக்கிரமித்துள்ளது.

வாஜ்பாய் அரசு ஆட்சியில் தொடர வேண்டும் என்றும், சோனியாகாந்தி வாஜ்பாய் அரசை கவிழ்த்து ஆட்சியை பிடிக்க வேண்டும் என்றும் பாரதியஜனதாவும், காங்கிரஸ் கட்சியும் போட்டி போடுகின்றன.

கடந்தவாரம் கலைக்கப்பட்ட பாராளுமன்ற மக்களவையில் பாரதிய ஜனதா 182 உறுப்பினர்களையும்,112 உறுப்பினர்களை காங்கிரஸ் கட்சியும் கொண்டிருந்தன.

எனவே எதிர்காலத்தேர்தலில் 'இந்த நிலையே காணப்படுமா.. அல்லது காங்கிரஸ் அதிக ஆசனங்களை தன்வசம் கொள்ளுமா...என்பதைத்தான் தேர்தல் முடிவுகள் காட்டவுள்ளன.

இந்தவகையில் உத்தரப் பிரதேசத்தில் எந்தக்கட்சி அதிக தொகுதிகளை கைப்பற்றுகின்றதோ அந்தக்கட்சியே ஆட்சிபீடமேறும் என்று அரசியல் வட்டாரத்தில் காலம் காலமாக நிலவிவரும் கருத்து.

இங்கு 81 தொகுதிகள் உள்ளன. பெரிய மாநிலம் என்பதும் உத்தரப்பிரதேசத்தின் சிறப்பாக கணிக்கப்படுகின்றது.

இந்த மாநிலத்தில் காங்கிரஸ் பாரதியஜனதா இரண்டுமே பலமாக இல்லை. சமாஜ்வாதி (முலாயம்சிங்யாதேவ்), பகுஜன் சமாஜ்கட்சி (மாயாவதி) என்பனவே பலம்பெற்று திகழ்கின்றன. மாயாவதி இதுவரை பாரதிய ஜனதாவுடன் நீடித்த உறவை கடந்த வருடம் முறித்துக் கொண்டுள்ளார்.

அது மட்டுமன்றி பாரதியஜனதாவை மண்கௌவ வைக்க பாடுபடப் போவதாகவும், வாஜ்பாய் அரசு தனக்கு துரோகமிழைத்து விட்டதாகவும் ஏற்கனவே சபதமெடுத்துள்ளார்.

இந்நிலையில்தான் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி மாயாவதியை அவருடைய வீட்டிலேயே சந்தித்துள்ளார். இது உத்தரப் பிரதேசத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வாஜ்பாய் அரசை கவிழ்க்கப் போவதாக கூறுவது என்பது எதிர்க்கட்சியுடன் இணைவதற்கு சமன் என்பதுடன் சோனியா காந்தியின் சந்திப்பும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

அதேநேரம் முலாயம்சிங் காங்கிரஸுடன் சேர்வதாக கூறவும் இல்லை. பாரதிய ஜனதாவுக்கு உங்களின் ஆதரவு தேவையென்று ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அழைப்பு விடுத்த போது நிராகரிக்கவுமில்லை என்பது முக்கியமானது.

அதுமட்டுமன்றி, முலாயம்சிங் முதலமைச்சராக பதவியேற்ற போது வாஜ்பாய் அந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார் என்பதையும் சேர்த்துப் பார்க்கும்போது முலாயம்சிங் பாரதிய ஜனதாவுடன் கூட்டணிக்கு தயாராகலாம் என்றும் கூறமுடியும்.

மறுபுறம் முலாயம்சிங் யாதேவ்வும், மாயாவதியும் ஒரே கூட்டணியில் நிலைக்க முடியாதவர்கள், இருவரும் எதிரெதிராகவே செயற்படுவர் என்பதனாலும் முலாயம்சிங் பாரதிய ஜனதாவுடனும், மாயாவதி காங்கிரஸுடனும் கூட்டணியை ஏற்படுத்த முடியும் என்றும் நம்பலாம்.

எனவே உத்தரப் பிரதேசத்தில் பாரதிய ஜனதாவுக்கும் காங்கிரசிற்குமிடையே பலத்த போட்டி ஏற்படவாய்ப்புண்டு. அந்தப் போட்டியில் வெற்றியைத் தேடித்தருபவர் முலாயம்சிங் யாதேவ்வா.., மாயாவதியா.. என்பதே அங்குள்ள நிலையாகவுள்ளது.

மகாராஷ்டிராவில் காங்கிரஸுக்கு முழு ஆதரவு இருக்கும் அதேவேளை எதிர்ப்பலைகளும் இல்லாமலில்லை. தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் 'சோனியா வெளிநாட்டவர்' என்று இதுவரை கோஷம் போட்டவர். தற்போது சோனியா வெளிநாட்டவர் என்பது பெரிய பிரச்சினையல்ல என்று கூறிவருகின்றார். இது சோனியாகாந்தியுடன் கூட்டணிக்கான ஆயத்தத்தை காட்டி நிற்கின்றது.

ஆனால் தேசியவாத காங்கிரஸிலுள்ள மூத்த தலைவர்கள் சரத்பவார் எழுப்பிய அதே கோஷத்தை கையிலெடுத்துக் கொண்டுள்ளனர். சரத்பவாரின் ஆதரவு நல்கலுக்கு இவர்கள் பலத்த எதிர்ப்பு காட்டுகின்றார்கள்.

இது மகாராஷ்டிரா மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது.' என்றாலும் சரத்பவார் இதுவரை கூட்டணிக்கு தடை என்று அறிவிக்கவில்லை என்பது பிளஸ்பொயின்ட்.

ஏனெனில் மாநில அரசில் காங்கிரஸ் உடன் தேசியவாத காங்கிரஸ் பங்காளியாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கேரளாவில் பாரதிய ஜனதாவுக்கு சட்டசபை ஆசனமோ, மக்களவை ஆசனமோ ஒன்று கூடக் கிடையாது. ஆனால் காங்கிரஸ் வெற்றி வாய்ப்பை தவறவிடவும் கூடும். ஏனெனில், கேரளாவில் உட்கட்சிப் பூசல் உச்ச நிலையையடைந்துள்ளது. அந்தவகையில் தான் முதல்வர் அந்தோனியை எதிர்த்து மூத்த காங்கிரஸ் தலைவர் கருணாகரன் தனிக்கட்சி அண்மையில் அமைத்துள்ளார்.

முதல்வர் அந்தோனி விடயத்தில் கட்சித் தலைமை சோனியா எவ்விதமான அணுகுமுறைகளையும் கையாளவில்லை என்பது காங்கிரஸ் மூத்த தலைவர் கருணாகரனின் குற்றச்சாட்டு.

அதனால் கருணாகரன் தலைமையிலான கட்சியுடன் பாரதிய ஜனதா கூட்டணி சேர்வதன் மூலம், கேரளா மாநிலத்தில் கால் பதிக்கவும் வாய்ப்புண்டு. ஆந்திரா மாநிலத்தில் முதல்வர் சந்திரபாபுநாயுடு பாரதிய ஜனதாவுக்கு வெளியிலிருந்து இதுவரையும் ஆதரவு வழங்கி இருந்தார்.

ஆனால் தற்போது அங்கு காங்கிரஸ் பலம் வாய்ந்த அணியாக உருவாகி வருவதாக கருத்துக்கணிப்புக் கூறுகின்றது. முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு அவருடைய உடன் பிறந்த சகோதரரே பரம எதிரியாக மாறி விட்டார்.

சந்திரபாபு நாயுடு மக்களுக்கு சேவையாற்றாது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்று கூறியுள்ள இவர் தன்னிடம் அதற்கான ஆதாரமும் இருப்பதாகப் பறைசாற்றி வருகின்றார்.

இதனால் உடன்பிறந்த சகோதரரே குற்றச்சாட்டுக்களை சுமத்துவதால் இத்தகைய நிலை முதல்வருக்கு மிகுந்த நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றது. இதனால் அவரது புகழிற்கு கறை ஏற்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி சந்திரபாபு நாயுடுவின் சகோதரரை காங்கிரஸ் வளைத்துப் போட்டுள்ளதாகவும், தேர்தல் பிரச்சாரத்தில் அவர் முக்கிய பங்காற்றுவார் என்றும் இதனாலேயே காங்கிரஸ் பலம் பெற்றுள்ளதாகவும் கூட்டப்படுகின்றது. இதனால் தான் போலும் வாஜ்பாயின் தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் அரசமைத்தால் தெலுங்கு தேசம் இம்முறை அரசில் அங்கம் வகிக்கும் என்று சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

இதேநேரம் பாரதிய ஜனதாவின் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தற்போது ஐக்கிய ஜனதா தளம் விலகியுள்ளது.

அதேபோல் ஹரியானா மாநிலத்தின் முதல்வர் ஓம் பிரகாஷ் பாரதிய ஜனதாவின் கூட்டணியிலிருந்து தமது கட்சி இந்திய தேசிய லோக் தளம் விலகியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு அம்மாநிலத்தில் பாரதிய ஜனதாவின் முன்னேற்றத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தலாம்.

இதேவேளை தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி வலுவடைந்தும், தொகுதிப் பங்கீடுகளில் சமரசமும் நிலவுவதாக எதிர்பார்ப்பு நிலவுகின்றது.


தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி 1980 தொடக்கம் 1990 வரையான காலத்தில் 28 இடங்களைக் கைப்பற்றியது.

ஆனால் 1996, 1998இல் காங்கிரஸுக்கு ஓரிடம் கூட கிடைக்கவில்லை. 1999இல் இரண்டு இடங்கள் மட்டுமே கிடைத்தன.

இம்முறை 10 தொகுதிகளில் போட்டியிடவுள்ள காங்கிரஸ் 10 தொகுதிகளிலும் வெற்றி பெற்றால்தான் அரசமைக்க வாய்ப்பு பற்றி அடி எடுத்து வைக்க முடியும்.

ஆந்திரா, தமிழகம், ஜார்கண்ட், பீகார், உத்தரப் பிரதேசம், ஹரியானா, டில்லி, குஜராத், ஒரிஸா போன்ற மாநிலங்களை காங்கிரஸ் தனதாக்கிக்கொள்ளும் என்றும், 1999இல் வாஜ்பாயின் பாரதிய ஜனதா பெற்ற வெற்றி இம்முறை கிடைக்காது என்றும் கருத்துக் கணிப்புக் கூறுகின்றது.

அதேபோல் சோனியா வெளிநாட்டவர் என்பதை 60 வீதமானவர்கள் பெரிய பிரச்சினையாகக் கொள்ளவில்லை என்று மற்றொரு கணிப்புத் தெரிவித்திருக்கிறது.




இந்நிலையில் தாயார் சோனியா காந்திக்காக பிரியங்காவும், ராகுல் காந்தியும் பிரச்சாரக் களத்தில் குதித்துள்ளார்கள். ராகுல் காந்தி வடமாநிலங்களிலும், பிரியங்கா தென் மாநிலங்களிலும் பிரச்சாரம் செய்யவுள்ளதாகவும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் கூறியுள்ளார்.

சோனியா காந்தி வெளிநாட்டவர் என்று பாரதிய ஜனதா பிரச்சாரம் செய்யுமானால் பிரியங்கா பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பிரச்சாரம் போல் கூறுகின்றார்கள்.

பிரியங்கா பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்படுவதை 60 சதவீத மக்கள் விரும்புவதாகவும் அன்னை இந்திராகாந்தியே திரும்ப வந்துள்ளார் என்று மக்கள் சந்தோஷப்படுவதாகவும் பத்திரிகைக் கணிப்புக் கூறுகின்றது.

காங்கிரஸ் கட்சியில் தேர்தல் வியூகமே பிரியங்காவும், ராகுலும் பிரச்சாரத்தில் களமிறக்கப்பட்டிருப்பது.

அதேநேரம் மேனகா காந்தியின் மகன் வருண் காந்தியை பாரதிய ஜனதா களமிறக்க திட்டமிட்டுள்ளது.


அதேவேளை, மிகவும் பழுத்த அரசியல்வாதியான வாஜ்பாயை தோற்கடிப்பது இலகுவானதல்ல என்றும், அவர் பிரதமராக மீண்டும் வருவதை 47 சதவீத மக்கள் விரும்புவதாகவும் அண்மையில் வெளிவந்த கருத்துக்கணிப்பு கூறியுள்ளது.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் கூட அதிகமான சலுகைகளை வழங்கியிருப்பது கூட என்னவிலை கொடுத்தாவது தேர்தல் வெற்றியை வாஜ்பாய் பெறும் நோக்கிலேயே என்பது அரசியல் ஆய்வாளர்கள் கருத்து.

அத்துடன் பாகிஸ்தானுடனான கார்கில் போரை பிரச்சாரமாகப் பயன்படுத்தி 1999 இல் வெற்றி பெற்ற பாரதிய ஜனதா இம்முறை பாகிஸ்தானுடனான சமாதான நடவடிக்கைகளை பிரச்சார உத்தியாகக் கொண்டு வெற்றிபெறலாம் என்றும் எதிர்பார்க்கலாம்.

அதனால் எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டுவது பாரதிய ஜனதாவாக இருக்குமானால் வாஜ்பாயிக்கு நிகராக எவரும் உருவாக்கம் பெறவில்லை என்றே கூறநேரிடும். மறுபுறம் காங்கிரஸ் வெற்றியை தட்டிச் செல்லுமானால் வாஜ்பாய் பற்றிய கணிப்பு தவறாக மாறிவிடும்.

**அ.கலைவாணி**




## பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் கடந்த வருடத்தில் 1,783 ஆக பதிவு!

### -யாழ்ப்பாணத்தில் 23 சம்பவங்கள்

(கொழும்பு)

சிறிலங்காவில் பெண்கள் மீது கடந்த வருடம் 1783 பாலியல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் தலைமையக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

2002-ம் ஆண்டைவிட 2003 ஆம் ஆண்டில் பெண்கள் மீதான இப்பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக இந்தப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அநுராதபுரம், பொலநறுவை, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலேயே அதிக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் பதிவாகியுள்ளன.

அநுராதபுரத்தில் 149, பொலநறுவையில் 145, மாத்தறையில் 111, கேகாலையில் 81, கொழும்பில் 45, யாழ்ப்பாணத்தில் 23 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மேலும் இச்சம்பவங்களோடு தொடர்புடைய 168 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

பாலிநகர் மகாவித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு வித்தியாலய அதிபர் ஆ.சுந்தரலிங்கம் தலைமையில் கடந்த புதனன்று இடம் பெற்றது.

பொதுச் சுடரினை துணுக்காய் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா, மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி இராஜேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை பாண்டியன்குளம் பிரதேசப் பொறுப்பாளர் தி.கலைவாணன் ஏற்றிவைத்தார்.

இதில் மலைமகள் இல்லம் 1ஆம் இடத்தையும், திருமகள் இல்லம் 2 ஆம் இடத்தையும், கலைமகள் இல்லம் 3ஆம் இடத்தையும் பெற்றது. வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத சூழல் அரசியல் ஸ்திரமற்ற நிலையால் தோன்றியுள்ளது

## யு.எஸ்.எயிட் அமைப்பின் பிரதிநிதி விசனம்

**இலங்கையின் அரசியல் ஸ்திரமற்ற நிலை இலங்கைக்கான வெளிநாடுகளின் நிதி உதவிகளை நிலைகுலையச் செய்துள்ளது என்று அமெரிக்கா கூறியுள்ளது.**

பொருளாதார கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் அபிவிருத்தியானது சமாதானத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. இந்த நிலையில் அரசியல் ஸ்திரம் அற்ற நிலை காரணமாக சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத சூழல் தோன்றியுள்ளதுடன், சர்வதேசத்தின் ஆதரவை இழக்கும் அபாயமும் தோன்றியுள்ளது என்றும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க நிலையத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க உதவி (USAID) நிறுவன பிரதி உதவி நிர்வாகஸ்தரான மார்க் எஸ்.வார்ட் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும் அபிவிருத்திக்கும் அமெரிக்கா என்றும் உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டீட்டும் கலந்து கொண்டுள்ளார்.

மார்க் எஸ். வார்ட் மேலும் கூறுகையில், சுமார் பத்து வருடங்களுக்குப் பின்னர் நான் இலங்கைக்கு வந்துள்ளேன். பாதுகாப்பு கெடுபிடிகள் இல்லை, குண்டுவெடிப்புக்கள் இல்லை, அமைதியான சூழல் நிலவுகின்றது. போர் நிறுத்தத்தை அர்ப்பணிப்புடன் முன்னெடுப்பது வரவேற்கத்தக்கது. இலங்கையின் அமைதி குறித்து சர்வதேச சமூகம் பெருமிதத்துடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்கின்றது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைக்கு பங்களிப்பு வழங்க நாம் தயாராகவுள்ளோம். இலங்கையை திடமான சமாதானத்தை நோக்கித் தள்ளுவது எமது பொறுப்பாகும். இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும் அபிவிருத்திக்கும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு அத்தியாவசியமானது.

அமெரிக்கா சமீபத்தில் 120 டொலர் 5 வருட அபிவிருத்தித்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான தலைப்பு இலங்கையின் சமாதானத்துக்கும், மறுசீரமைப்புக்குமான உதவி என்பதாகும்.

அமெரிக்க நிதிவழங்கல் நிறுவனம், இலங்கையின் அபிவிருத்திக்கு பின்வரும் உதவிகளையும் வழங்க உள்ளது.

வளர்ச்சிக்கும் பொருளாதார மறுசீரமைப்புக்குமான தனியார் துறைக்கு உதவுதல், தொழிலுக்கான திறமையையும் தேவையையும் அபிவிருத்தி செய்தல், பல்வேறுபட்டோரின் பங்கேற்பு, பங்கேற்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் வாயிலாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல், சனநாயக கழகங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு உதவுதல் என்பவற்றையும் உதவிகளாக வழங்கவுள்ளோம்.

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரம் இன்மையை சர்வதேசம் தீவிரமாக நோக்குகிறது. அதன் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கவனம் எடுக்கிறது. தற்போதுள்ள சமாதான நடவடிக்கைகளை சாதகமாக்கிக் கொள்ள அனைவரும் ஆதரவு நல்கவேண்டும். அதன் மூலமே சர்வதேசத்தினது ஒத்துழைப்பைப் பெற முடியும். யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயம் எம்மால் மறக்க முடியாத ஒன்றாகும். யுத்தத்தினால் அப்பகுதி முகம்கொடுத்துள்ள அழிவுகளைப் போன்றே மக்களும் துன்பத்துக்குள்ளாகியிருப்பதை உணர முடிகிறது என்றார்.

## தனித்துப் போட்டி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்கு உட்பட ஐந்து மாகாணங்களில் 13 மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடவுள்ளது. கட்சியின் உயர் மட்டக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# நித்திரை கொள்வோரை மயக்கிவிட்டு கொள்ளை

திருகோணமலை நகரில் வீடு உடைத்து களவெடுக்கும் குழுவினரின் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் இதனையடுத்து தொடர்ந்து பொலிசார் நள்ளிரவில் ரோந்து பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

வீடுகளை உடைத்துக்கொண்டு உள்ளே புகும்திருடர்கள் ஸ்பிரே செய்து குடியிருப்பவர்களை மயக்கிவிட்டு கொள்ளையில் ஈடுபடுகின்றனர்.

இதனையடுத்தே பொலிசார் நள்ளிரவில் ஒருமணிதொடக்கம் அதிகாலை ஐந்துமணிவரை ரோந்துப் பணியில் ஈடுபடுவதாகவும கூறப்படுகிறது.

# நூலகத் திறப்புவிழா

கிளி/ இராமநாதபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த வியாழனன்று நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

புதிய கல்வி சீர்திருத்தத்திற்கு அமைவாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிஉதவியுடன் 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. புதிய நூலக கட்டடத்தின் திறப்பு விழாவுடன் புத்தகக் கண்காட்சியொன்றும் காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் சி.பாலகிருஸ்ணன் தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் மங்கல விளக்கினை அழகாபுரி வித்தியாலய அதிபர் நடராஜா அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர் கைலாயபிள்ளை ஆகியோரும் ஏற்றிவைத்தனர். நூலகத்தினை கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் க.அரியரத்தினம் நாடாவை வெட்டி திறந்து ஆரம்பித்து வைத்தார்.

தமிழீழ மாணவர் அமைப்பின் அறிவியல் கண்காட்சி குறித்த விளக்கப்படம் அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது. புத்தகக்கண்காட்சியில் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் நூலகத்திற்கான புத்தகங்களை வாங்கி அன்பளிப்புச் செய்தனர். அபிவிருத்திச் சங்கசெயலாளர் இராஜேந்திரத்தின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. (12)

# சனாதிபதியின் எண்ணத்தை ஒருபோதும் மக்கள் நிறைவேற்ற மாட்டார்கள்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

இந்தியா உட்பட 45 நாடுகளின் தலைவர்களின் கூற்றுக்கு செவி மடுக்காமல் 900 மில்லியன் செலவு செய்யும் பொதுத் தேர்தலுக்கு சனாதிபதி நாட்டு மக்களை முகம் கொடுக்க வைத்துள்ளார். எனினும் தேர்தலில் வெற்றிபெறும் சனாதிபதியின் எண்ணத்தை மக்கள் ஒருபோதும் நிறைவேற்ற மாட்டார்கள்.

இவ்வாறு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

சனாதிபதி எமது அமைச்சர்கள் ஊழல் புரிந்ததாக குற்றம் சாட்டியுள்ளார். முடியுமானால் சனாதிபதியின் கீழ் இயங்கும் இரகசிய பொலிசாரையும ஊழல் ஆணைக்குழுவையும் பயன்படுத்தி எமது அமைச்சர்களின் ஊழலை சனாதிபதி கண்டுபிடிக்கட்டும்.

அப்படிச் செய்தால் முதலில் சிக்குபவர் சனாதிபதியின் மாமனாரே. இவ்வாறு அண்மையில் கம்பளையில் கூரைத் தகடுகள் வழஙகும் வைபவத்தில் கூறியுள்ளார்.

# விபத்துக்கு காரணமான சிப்பாய்கள் மீது குற்றப் பத்திரிகை

இராணுவ பீல்ட் பைக்கினால் மோதி காயம் விளைவித்ததாக தெரிவித்து, படையினர் இருவருக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரமொன்று சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பொது மக்களால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினை யடுத்தே, பொலிசார் இக்குற்றப் பத்திரத்தினைத் தாக்கல் செய்துள்ளனர். கடந்த 9ஆம்திகதி நண்பகல் அளவில் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதிப்பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. துவிச்சக்கர வண்டியில் அவ்வீதியூடாக குறித்த பொதுமகன் பயணித்திருந்ததாகவும் அவ்வேளையில் தபாலகத்திற்கு முன்னாலுள்ள படைமுகாமில் இருந்து திடீரென புறப்பட்டுவந்த படையினரின் மோட்டார் சைக்கிளாலேயே அவர் மோதப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மேற்படி குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சவகச்சேரி நீதவான் பா.சுப்பிரமணியம், சம்பவம் தொடர்பான அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க இராணுவ பொலீசாருக்கு உத்தரவிட்டுள்ளார். அத்துடன் விசாரணைகளை எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (27)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டணி சேர கம்யூனிஸ்ட் இணக்கம்

## லங்கா சமசமாஜக்கட்சி ஆலோசனை

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றின் மூலம் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் இம்முறை தேர்தலில் போட்டியிட கம்யூனிஸ்ட் கட்சி முன்வந்துள்ளது.

கடந்த 12ம் திகதி இது தொடர்பாக சனாதிபதி செயலகத்தில் சந்திரிகாவுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் இவ்விணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதாக முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலர் ராஜா கொலூரே தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பொ.ஐ.மு.செயலர் ரி.எம்.ஜெயரத்தின, ராஜாகொலூரே, டியூ குணசேகர ஆகியோரும் பங்குபற்றினர்.

இதன்படி அடுத்த வாரம் கூட்டணியுடன் தமது கட்சி ஒப்பந்தம் செய்து கொள்ளும் என கொலூரே தெரிவித்துள்ளார்.

இக்கூட்டணியின் கீழ்கொழும்பு, மாத்தறை, இரத்தினபுரி, அநுராதபுரம், ஆகிய மாவட்டங்களுட்பட சில மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிட இணக்கம் காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தமது கட்சியின் வேட்பாளர்கள் எத்தனை பேர் போட்டியிடுவர் என்பது பற்றி அவர் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் இக்கூட்டணியில் இணைந்து போட்டியிட லங்கா சமசமாஜக்கட்சி சனாதிபதியுடன் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவை அனைத்தினதும் நோக்கம் ஐக்கிய தேசிய முன்னணியை தேர்தலில் தோல்வியடையச் செய்வதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நகர திட்டமிடல் கூட்டம் நாளை மறுதினம் நடைபெறும்

(அலுவலகசெய்தியாளர்)

நகர திட்டமிடல் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் அறிவித்துள்ளார்.

இந்த திட்டமிடல் கூட்டத்தில் வீதியோர கடைகளை அகற்றல் மற்றும் பொழுது போக்கு வலயம், விளையாட்டு மைதானத்திற்கு பின்புறமாக குடியேறியுள்ள குடும்பங்கள், பெந்துகோஸ்தே சபை கட்டடம், திணைக்கள காணிகளில் அத்துமீறல், இரத்தினபுரம் பகுதியில் அத்துமீறல் என்பவற்றுடன் பரந்தன் -முல்லைவீதி அகலமாக்கல், பல்கலைக்கழக காணி ஒதுக்கீடு, வட்டக்கச்சி விவசாயப் பண்ணை காணியில் குடியேறியுள்ள குடும்பங்கள், காணி கோரும் விண்ணப்பங்கள், போரினால் பாதிக்கப்பட்ட கட்டடங்கள் பேணல் என்பன தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார். (சோ)

# புலமைப் பரிசில் பெற்ற மாணவர் கௌரவிப்பு

கிளி/சிவநகர் அ.த.க பாடசாலையில் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா நாளை காலை 10.00 மணிக்கு சிவநகர் பாடசாலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

த.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் முதன்மைவிருந்தினராக கிளி. வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், சிறப்பு விருந்தினராக பிரதிக்கல்விப்பணிப்பாளர் ப.மார்க்கண்டு, கௌரவவிருந்தினராக வன்னி கல்விக்கழகப் பொறுப்பாளர் எஸ்.ஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (சோ)

# கையடக்கத் தொலைபேசிகளுக்கு வரும் அழைப்புக்களுக்கு கட்டணமில்லை

## வரும் முதலாம் திகதி முதல் அமுல்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளுக்கு வந்து சேரும் அழைப்புக்கள் பாவனையாளர்களுக்கு அடுத்த மாதம் 01ஆம் திகதி முதல் இலவசமாக கிடைக்கவுள்ளன.

ஆயினும் அழைப்பை ஏற்படுத்தியவர் இதற்கான செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையை அதிகரிப்பதே நோக்கமாகுமென இலங்கைத் தொலைபேசி ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பொலிசாரின் விடுமுறைகள் ரத்து

(கொழும்பு).

பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவுள்ள பெப்ரவரி 17ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை பொலிசாரின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா கூறியுள்ளார்.

அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும், வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தாக்கல் நடவடிக்கைகளை அமைதியாக நடத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் நடவடிக்கைகளின் போது அதிகபட்ச பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக பொலிஸ் நிலையங்களில் விசேடசெயலகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அம்பாறையில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் நடவடிக்கைகளுக்கு பாதுகாப்புவழங்கும் முகமாக விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் கூறியுள்ளார்.

முத்தையன் கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் [வ.து] ஒட்டுசுட்டான்.

# கிளைமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிக்கு சங்க எல்லைப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**வயது:- 18 வயது-45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.கூட்டுறவு பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருந்தாது.**

**சம்பளக் குறியீட்டு எண்:- 208/15**

**சம்பளம் : 3500-4850**

**65/10-70/10**

**கல்வித் தகைமை:**

- கூட்டுறவுப் பணியாளர் 16வது. சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவ்ம்,

அல்லது

- கூட்டுப் பணியாளரின் 17வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்,

அல்லது

- கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரம் / க.பொ.த. சாதாரணதரத்தில் இரு அமர்வுகளிற்கு மேற்படாமல் கணிதம், தமிழ்பாசை என்பவற்றை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி.

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி விண்ணப்பங்கள் தலைவர், முத்தையன் கட்டு பல.நோ.கூட்டுறவு சங்கம் ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 29.02.2004. நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடல் வேண்டும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
**இ.சற்குணம்,**
தலைவர்,
மு.ஐ.க.பல.நோ.கூ.சங்கம்,
ஒட்டுசுட்டான்.

(சி.7157)

# மின் வழங்கல் பற்றிய கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப் பகுதியில் மின் வழங்கலுக்குத் தெரிவு செய்யப்பட்ட 150 மின் நுகர் வோருக்கான மின் கட்டணத்தை நிர்ணயிப்பது தொடர்பான கலந்துரையாடல் கரைதுறை பற்று பிரதேச சபை கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 18.02.2004. புதன் கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் குறிப்பிட்ட 150 நுகர்வோர்களை தவறாது சமுகம் தருமாறு கரைதுறைப் பற்று பிரதேசசபைச் செயலாளர் திருமதி. நேசரட்ணம்சுகிர்தா கேட்டுக் கொள்கின்றார்.அத்துடன் எதிர் வரும் 23.02.2004. அன்று உத்தியோக பூர்வமாக மின் வழங்கல் சேவைஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (20)

விசுவமடுவ்வசார்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## கிளைக்குழு தேரிவுக்கானகிளைப் போதுக்கூட்டம்-கிளை இல.04.

௨004.0௨.14. ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுக்கூட்டம், அங்கத்தவர்கள் சமுகமின்மையால், நடைபெறவில்லை. எனவே, மேற்படி கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுக்கூட்டம், எதிர்வரும் ௨004.0௨.௨௨.ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை,9.00 மணிக்கு பிரமந்தனாறு சித்திவிநாயகர் ஆலயமுன்றலில் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்கட்கும் அறியத்தருவதுடன், கிளை அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு சமுகம் கொடுத்து, தெரிவை மேற்கொள்ளுமாறும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

15.02.2004.

செயலாளர்,
வி.வி.ப.நோ.கூ.சங்கம்,
விசுவமடு.

(4240)

# கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுக் கூட்டங்கள்

மேற்படி சங்கத்தின் கிளைப் பொதுச்சபைக் கூட்டமும், கிளைக்குழு தெரிவும், பொதுச்சபை பிரதிநிதிகள் தெரிவும் எதிர்வரும் ௨004.0௨.௨ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்த அந்தப் பகுதிக் கிளைகளில் நடைபெற உள்ளது. எனவே கிளை உறுப்பினர்கள் கீழ் வரும் இடங்களில் மேற்படி திகதியில் சமுகம் கொடுத்து தங்கள் கிளைக்குழுவையும் சங்கத்திற்கான பொதுச்சபைப் பிரதி நிதிகளையும் தெரிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப்பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 01 | வித்தியாபுரம் கிளை | மு/கருவேலன்கண்டல் அ.த.க.பாடசாலை கருவேலன்கண்டல், |
| 02 | முத்துஐயன்கட்டு குளம் | மு.ஐ.க.இடதுகரை கிளை நிலையம், |
| 03 | முத்துவிநாயகபுரம் | வலதுகரை மு.ஐ.கட்டு கிளைநிலையம் மு.வி.புரம், |
| 04 | கணேசன் கிளை | கணேசபுரம் கிளை நிலையம் மு.ஐ.கட்டு, |
| 05 | கூழாமுறிப்பு கிளை | கூழாமுறிப்பு கிளை நிலையம், |
| 06 | மன்னாகண்டல் கிளை | மன்னாகண்டல் கிளை நிலையம், |
| 07 | பண்டாரவன்னியன் கிளை | பண்டாரவன்னியன் கிளைநிலையம் கற்சிலைமடு. |
| 08 | பண்டாரவன்னியன் கிளை | பண்டாரவன்னியன் கிளை நிலையம் கற்சிலைமடு. |

செயலாளர்,
மு.ஐ.கட்டு பல நோ.கூ.சங்கம்,
ஒட்டுசுட்டான்.

(சி-7156)

# இயலவிற்பனை

## (ஏல விற்பனை)

**01. உந்துருளிகள்**

*இயங்கும் நிலை

*உதிரிகளாக்கும் நிலை

**02. பார்வையிடும் காலம்:-** 14,15,16,-02-2004

**இயலம் விடப்படும் நாள்:-** 17 - 02 - 2004

**இடம் :-** பாண்டியன் ஊர்திவிற்பனை நிலையம், கரடிப்போக்குச்சந்தி, கிளிநொச்சி.

(3984)

[௨ஆம் பக்கத்தொடர்ச்சி]

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் அலுவலகம், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), கச்சேரி, திருகோணமலை என்ற விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227503, பக்ஸ்: 026-2227503, ஈமெயில்: necord tc @ sltnetlk

6. கேள்வி ஆவணங்களை 2004 பெப்ரவரி 16 இலிருந்து 2004 மார்ச் 01 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000 /= ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், மாவட்ட கேள்விச்சபை "நிக்கோட்", மாவட்ட செயற்திட்ட அலுவலகம், கச்சேரி, திருகோணமலை என்ற விலாசம் இடப்பட்டு, மார்ச் 5 ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகம் அளிக்க முடியும்.

8. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டம் ஒன்று இதன் தொடர்பாக பந்தி ஐந்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 2004 பெப்ரவரி 27 ஆம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

9. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விபிடுவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி தாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

எம் டி ஏ.ஜீ. றொட்ரிகோ,
அரசஅதிபர்/தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை,
NECORD கருத்திட்டம்,
திருகோணமலை.

(சி-8788)



**சிந்தனைக்கு**

எதிரிகளைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்

தமிழீழத்தேசியத் தலைவர்


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 15 -02-2004


# தயாராகின்றனர்!

யாழ்.குடாநாட்டிலுள்ளஇராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும்-வன்னி மற்றும் யாழ்.குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இடையிலான போக்குவரத்தில் இராணுவம் புதிய நெருக்கடிகளைத் தொடங்கியுள்ளது. இக்கெடுபிடி சிறிலங்காவின் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நாளில் இருந்து குறிப்பாகப் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து தொடங்கப்பட்டுள்ளது.

இக்கெடுபிடிகளின் ஓர் அங்கமாக முகமாலைச் சோதனைச் சாவடியில், வாகன அனுமதிப்பத்திரம், வாகனக்காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், அற்ற வாகனங்கள் எவையும், பயணம் செய்வதற்கு அனுமதிக்காது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. ஒரு வாகனத்திற்கும், வாகனச்சாரதிக்கும் இவையெல்லாம் சட்ட பூர்வமாகவும்சரி, பாதுகாப்பு அடிப்படையிலும் சரி தேவையானவையே என்பது மறுப்பதற்கில்லை. ஆனால், சுமார் இரண்டாண்டுகள் அனுமதிக்கப்பட்ட நடைமுறையை தற்பொழுது மாற்றவேண்டிய அவசியம்தான் என்ன?

அதிலும் குறிப்பாகப் பொதுமக்களிடம் இவற்றைக் கோருவது ஏற்றுக்கொள்ளத்தக்க தொன்றாக வைத்துக்கொண்டாலும், விடுதலைப்புலிகளிடம் இவற்றைக் கோருவது பொதுமக்களிடம் கோருவதற்கான அடிப்படையாக இருக்க முடியாது. இவை கோரபடுவதன் அடிப்படை நோக்கத்தில் சட்டம், மற்றும் பாதுகாப்பு என்பதற்கும் அப்பால் வேறு காரணிகளும் இருப்பதாகச் சந்தேகிக்க நியாயம் உண்டு. அதிலும் தற்போதைய அரசியற்சூழ்நிலையில் இவ்வாறு கோருவது குறித்து முன்னெச்சரிக்கையாகச் சிந்திக்க வேண்டிய அவசியம்ஏற்பட்டுள்ளது.

இதில் முக்கியமாகக் கவனத்திற் கொள்ளவேண்டிய விடயம் யாழ். குடாநாட்டில் தேர்தலின் பொருட்டு மீண்டும் ஈ.பி.டி.பி.யினர் பிரவேசிக்கத் தொடங்கியுள்ள விடயமாகும். இத்தேச விரோதக் கும்பல்களுக்கு ஏற்கனவே சிங்கள கட்சிகளின் ஆதரவும், சிறிலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்பும் இருந்ததென்பது வெளிப்படையானது. மறுவளமாகம் இவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டனர் என்பதும் வெளிப்படையானது.

இவர்கள்-ஈ.பி.டி.பி.யினர்-தற்பொழுது யாழ்.குடாநாட்டிற்கு வருகைதந்துள்ளமை எதிர்வரும்தேர்தலில் தமது குழுவிற்கான வாக்குப்பெட்டிகளை நிரப்பிக்கொள்வதற்காகவே ஆகும். இவர்கள் கடந்த காலத் தேர்தல்களில் எவ்வாறு மோசடிகளில் ஈடுபட்டார்கள் என்பதும்அம் மோசடிகளை வெளிக்கொண்டு வந்த சுயாதீனச் செய்தியாளர் நிமலராஜனை எவ்வாறு படுகொலை செய்தார்கள் என்பதும் உலகறிந்த இரகசியம். இதற்கு இராணுவம் வழங்கிய ஒத்துழைப்பும் மூடிமறைத்துவிடக்கூடியதல்ல. தற்பொழுது மீண்டும்தேர்தல் வந்துள்ளதால் ஏதோ ஒரு வகையில் வாக்குப் பெட்டிகளை நிரப்ப அவர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்களுக்கு ஏற்கனவே சனாதிபதி சந்திரிகா. தரப்பால் பெரும் நிதியுதவி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் இராணுவத்தரப்பின் ஒத்துழைப்புடன் தேர்தல் வேலையில் ஈடுபடுவதே அவர்களின் நோக்கமாகும். இதற்கான ஒத்துழைப்பை மேலிடத்தின் பணிப்பின் பேரிலோ அன்றி கடந்தகால அனுபவத்தின் அடிப்படையிலோ யாழ்.குடாநாட்டில் இராணுவம் ஏற்கனவே தொடங்கிவிட்டது என்பதே உண்மையாகும்.

இதேவேளை ஈ.பி.டி.பி.யினரைத் தவிர வேறும் சில குழுக்கள்கூட சிங்கள ஆட்சியாளர்களின் துணையுடன் ஆசீர்வாதத்துடனும்பெரும் பண உதவியுடனும் யாழ்.குடாநாட்டில் தேர்தலில் குதிக்கலாம். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி போன்றவை இதற்குத் தம்மைத்தயார்படுத்திக் கொள்ளக்கூடும். இவர்களுக்கு இத் தேர்தல்களில் வாக்குக் கிடைக்கிறதோ இல்லையோ இவர்களுக்குப் பெருமளவான பணம் கிடைக்கும். அடுத்த தேர்தல் வரையில் அவர்கள் சுகபோகமாகத் தமது வாழ்கையைஓட்ட அதுபோதுமானதாகும்.

இத்தகையதொரு நிலைதான். தற்பொழுது முகமாலைச் சோதனைச் சாவடியில் இராணுவம் கெடுபிடிகளை ஆரம்பித்துள்ளதை நோக்கவேண்டியுள்ளது. அதாவது யாழ். குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் பிரசன்னம்-அரசியல் நடவடிக்கைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம்ஈ.பி.டி.பி.யினரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே இராணுவத்தரப்பின் நோக்கமாகும்.

ஆனால், யாழ்.குடாநாட்டிற்குள் பிரவேசிப்பதற்குத் தற்பொழுது இராணுவத்தால் கொண்டுவரப்பட்டுள்ள கெடுபிடிகள் மட்டும்தான் தமிழ்தேச விரோதக்குழுக்களுக்கு இராணுவத்தரப்பு வழங்கும் ஒத்துழைப்பாக மட்டும் இருக்காது. இது முதற்கட்ட நடவடிக்கை மட்டுமே. இதற்கு அப்பால் மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள அது முற்படும் என்றே எதிர்பார்க்கலாம். குறிப்பாக யாழ்.குடாநாட்டில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீதும் அரசியற் பணியில் ஈடுபடும் போராளிகள் மீதும் அழுத்தங்களைக் கொடுக்கலாம். தேசவிரோதக் குழுக்களின் பிரச்சாரம், மோசடிகள் என்பனவற்றிற்கு ஒத்துழைப்பும், பாதுகாப்பும் கூட வழங்கலாம். ஏற்கனவே இத்தகைய பணியில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர்.ஜெனரல் சுசிந்த பெரேரா ஈடுபட்டுள்ளதாகவும் ஈ.பி.டி.பிக்கு வாக்களிக்குமாறு அவர் மக்களைக் கோரியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத் தேர்தல் காலமானது இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதியிலஉள்ள மக்கள் மீதும், போராளிகள் மீதும் இராணுவம் அழுத்தங்களையும், கெடுபிடிகளையும் பிரயோகிப்பதற்கு வாய்ப்புக்கள் நிரம்பவே உண்டு. ஆகையினால் இக்காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் தேர்தல் மோசடிகள், வன்முறைகள் கட்டுமீறி யுத்தநிறுத்தத்திற்கே அபாயத்தை விளைவிக்கக்கூடியதாக மாறிவிடலாம். அதிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பத்திற்குள்ளாக்கிய இவர்களின் எஜமானர்களே இவ் விடைக்காலத் தேர்தலுக்குக் காரணமாகையால் அவர்கள் தேர்தலில் வெற்றிபெற எத்தகைய மோசடிகளையும் செய்யக்கூடும. அது சாத்தியமாகாது போகும்பட்சத்தில் யுத்த நிறுத்தத்தையே அவர்கள் குழப்பத்திற்கு உள்ளாக்கி விடவும் கூடும்.

# சனாதிபதியின் நடவடிக்கையால் மக்கள் துன்பத்தைச் சுமக்கும் நிலையேற்பட்டுள்ளது

## கண்டி மல்வத்த பீடாதிபதி கண்டனம்

(கொழும்பு)

சனாதிபதியின் அரசியல் நடவடிக்கைகளினால் நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைந்து வறிய மக்கள் மேலும் துன்பச் சுமையை சுமக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக கண்டி மல்வத்தை பௌத்த பீடாதிபதி ரம்புக் வெல்ல ஸ்ரீவிபஸ்ஸிதேரர் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னையிடம் வருததம் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி கடந்த சில மாதங்களாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவ்வகையிலும் பொருத்தமற்றது. இதனால் நாட்டு மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறான நடவடிக்கைகளால் இலங்கையின் பொருளாதாரம் பாதிப்படைந்து வறிய மக்களினது துன்பமும், சுமையும் அதிகரித்து வருகின்றன.

இந்த நாட்டு மக்கள் நிரந்தர சமாதானம் ஏற்படும் நாளைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். எனவே தற்போதைய .சூழ்நிலையில் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என நான் கருதுகின்றேன்.

என புதன்கிழமை மல்வத்தப் பீடத்தில் தன்னைச் சந்தித்த இந்தியத் தூதுவரிடம் மல்வத்த பீடாதிபதி தனது விசனத்தைத் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா போதைப் பொருள் கடத்தலுக்கு கேந்திர மத்திய நிலையமாக உள்ளது

## -போதைப் பொருள் தடுப்பு பணியகம்

(கொழும்பு)

சிறிலங்கா போதைப்பொருள் கடத்தலுக்கு கேந்திர மத்திய நிலையமாக விளங்குகின்றது என சிறிலங்கா போதைப் பொருள தடுப்பு பணியக பணிப்பாளர் பூசித் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில்; ஒரு நாளைக்கு போதைப்பொருள் பாவனைக்கு ஐந்து இலட்சம் ரூபா செலவு செய்யப்படுகின்றது. நாட்டில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள்.

நாட்டில் நடைபெறும் பல் வேறுபட்ட நாசகார செயல்களில் போதைப் பொருட்களைப் பாவிப்போர் அல்லது அதனை விற்பனை செய்வோர் ஈடுபட்டுள்ளனர். வவுனியா, மன்னார், புத்தளம்,சிலாபம் பகுதிகளில் அண்மைக்காலமாக இதனைப் பாவிப்போர் தொகை அதிகரித்துள்ளது.

இளைய சமுதாயத்தினர் மத்தியில் இதன் பழக்கம் அதிகரித்துள்ளது. மாணவர்கள் மத்தியிலும் இந்தப் பழக்கத்தை ஏற்படுத்த விற்பனையாளர்கள் பல்வேறு யுக்திகளை கையாண்டு வருகின்றனர். விமான நிலையத்தின் ஊடாக பல்வேறு வழிகளிலும் கடத்தல் -முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. என்று கூறினார்.

# சந்திரிகா ஒரு சர்வாதிகாரி

## -விக்கிரமபாகு கருணாரட்ன சீற்றம்!

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா ஒரு சர்வாதிகாரியென புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகுகருணரட்ன கூறியுள்ளார். அத்துடன் பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து எதுவித முன் உதாரணமுமின்றி நடத்து கொள்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் அவர் நீக்கியமை ஐ.தே.முன்னணியை பலவீனப் படுத்தும் அப்பட்டமான செயல் எனவும், இது புனரமைப்புப்பணிகளை குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு பணிகளையும் சமூகசேவைகளையும் பாதிக்கும் செயல் எனவும் தெரிவித்துள்ளார்.

# இந்திய கிரிக்கெட் அணி திட்டமிட்டபடி பாகிஸ்தான் பயணம்

திட்டமிட்டபடி இந்திய கிரிக்கெட் அணியைப் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்க பிரதமர் வாஜ்பாய் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த விடயம் பற்றி துணைப்பிரதமர் அத்வானி, வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த சின்ஹா மற்றும் பலருடன் டில்லியில் நேற்று நடைபெற்ற உயர் நிலைக்கூட்டத்தில் இதுபற்றி வாஜ்பாய் விசாரித்துள்ளார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜஸ்வந்த சின்ஹா பாகிஸ்தானுடன் சமாதான முயற்சிகளைத் தொடங்கியுள்ள வாஜ்பாய், அந்நாடுகளுடன் உறவுப் பிணைப்புக்களை மேம்படுத்தவே இந்திய கிரிக்கெட் அணியை அங்கு அனுப்ப முடிவு செய்துள்ளார் என்று கூறலாம்.

அடுத்த மாதம் 14 ஆம் திகதியிலிருந்து இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் பயணத்தைத் தொடங்கவுள்ளது.

# 3-வது தமிழீழ தேசிய விளையாட்டு விழா இரு மைதானங்களில் நடைபெற ஏற்பாடு

(அலுவலகசெய்தியாளர்)

மூன்றாவது தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் இரு உதைபந்தாட்டப் போட்டிகள் கிளி. மருதநகர் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. ஏனைய சகல போட்டிகளும் கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

20ம் திகதி காலை 9.00 மணிக்கு போட்டியாளர்களின் அணிவகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். காலை 9.30 மணிக்கு லெப்.கேணல் புலேந்தியம்மான், லெப்.கேணல் விக்ரர், லெப். கேணல்சந்திரன், மேஜர். அல்பேட், கேணல் சங்கர், மேஜர் சோதியா, கப்டன். அன்பரசி, கப்டன திலகா,லெப் சதா ஆகியோரின் திருவுருவப்படங்கள் எடுத்துச் செல்லப்பட்டு பொதுச்சுடர் ஈகச்சுடர்ஏற்றல் நடைபெறும்.

தொடர்ந்து தேசியக்கொடியேற்றல் ,அகவணக்கம், விளையாட்டுத்துறைக் கொடியேற்றல், மாவட்டக் கொடியேற்றல், ஒலிம்பிக்தீபம் ஏற்றல்,போட்டியாளர் சத்தியப்பிரமாணம், நடுவர்கள் சத்தியப்பிரமாணம் என்பன நடைபெறும். வரவேற்புரை, தலைமையுரை, சிறப்புரையை, தொடர்ந்து நடைபெறும். பண்பாட்டு நிகழ்வுகளுடன் ஆரம்ப நிகழ்வுகள் நிறைவு பெறும்.

மாலை3.00மணிக்குஅம்பாறை, கிளிநொச்சி,4.30மணிக்கு மன்னார்- வவுனியா, இரவு 7.00 மணிக்கு திருமலை-முல்லை, 8.00மணிக்கு மட்டு-யாழ் அணிகளுக்கிடையிலான லீக் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளாக முதல்நாள் நிகழ்வுகள் நடைபெறும்.

21ம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறும் அம்பாறை-வவுனியா மற்றும் 22ம் திகதி காலை8.30மணிக்கு நடைபெறும் திருமலை-மட்டு அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளே மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

உதைபந்தாட்டத்தில் முதலாவது அரையிறுதிப் போட்டி 23ம் திகதி இரவு9.00 மணிக்கும் இரண்டாவது அரை யிறுதிப் போட்டி 24ம் திகதி இரவு9.00 மணிக்கும் இறுதிப் போட்டி 27ம் திகதி பி.ப3.00 மணிக்கும் நடைபெறும்.

ஏனைய இறுதியாட்டங்கள் கபடி, (பெண்) 26ம்திகதி காலை 8.30மணிக்கும் அதேதினம் 9.30 மணிக்குக் கபடி(ஆண்), மாலை 3.30மணிக்கு தாச்சி(பெண்) மாலை 4.30 மணிக்கு தாச்சி (ஆண்), மாலை6.30மணிக்கு வலைப்பந்து, இரவு 7.30மணிக்கு கரப்பந்து (ஆண்), 27ம் திகதி காலை 8.30 மணிக்கு துடுப்பாட்டம் எனநடைபெற ஏற்பாடாகியுள்ளன.

27ம் திகதி மாலை 6.00மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து கலை நிகழ்வுடன் விழா இனிதே நிறைவுறும்.

இம்முறை போட்டியாளர்கள் நடுவர்கள்,பதிவாளர்கள் ஆகிய அனைவருக்கும் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் புகைப்படத்துடனான அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)



# ஈராக்கின் பலூஜா நகரில் தாக்குதல்; 14 பொலிசார் உள்ளிட்ட 22பேர் பலி!

(பாக்தாத்)

அமெரிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி யாளர்கள் நேற்று ஈராக்கில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பலூஜா நகரில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகம், மற்றும் பாதுகாப்பு அலுவலகம், நகர மேயர் அலுவலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியிலே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது 22பேர் உயிரிழந்துள்ளதுடன் 35பேர் காயமடைந்துள்ளனர் உயிரிழந்தவ்ர்களில் 14பொலிஸாரும், 4கிளர்ச்சியாளர்களும், 4பொது மக்களும் அடங்குவர். இதன்போது கிளர்ச்சியாளர்கள் பலர் சிறைச்சாலைக் கைதிகளையும் மீட்டுள்ளனர்.

# ஈழத்தமிழருக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன்—வைகோ

(லண்டன்)

ஈழத்தமிழர்களுக்கு விடியல் ஏற்பட வேண்டும். அவர்களுடைய சோக வரலாறு முடியவேண்டும் என்பதற்காக நான் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இந்திராகாந்தி உயிரோடு இருந்திருந்தால் என்றோ நிலமை வேறாக மாறியிருக்கும். அத்துடன் தமிழீழமே மலர்ந்திருக்கும் என தமிழோசைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:-

உலகம் முழுவதிலும் வாழ்த்தி வரவேற்ற அமைதி பேச்சுவார்த்தைக்குப் பெரும் குந்தகத்தை விளைவித்தவர் சந்திரிகா. ஐரோப்பிய யூனியன், தாய்லாந்து, சுவிஸ்லாந்து போன்ற பல நாடுகள் பேச்சுவார்த்தை வெற்றிபெற வேண்டுமென பாடுபட்டனர். விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்து வைக்கக்கூடிய அமெரிக்காவும், இங்கிலாந்தும் கூட இப்பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென விரும்பின. எனவே இலங்கையில் போர் சத்தம் ஓய்ந்து சிங்கள மக்களும் தமிழர்களும் அமைதி நிலவும் என எதிர் பார்த்திருந்த வேளை இதற்கு முன்னைய காலங்களில் எப்படி தமிழர்களுடைய எண்ணத்திலே மண்ணைப் போட்டார்களோ சிங்கள பேரினவாதிகள் அதே உணர்வுடன் தான் சந்திரிகா இப்போது செயற் பட்டுள்ளார். தமிழர்களின் இனத்தையே கருவறுக்க வேண்டுமென காலமெல்லாம் குரல் கொடுத்து வருகின்ற வெறிபிடித்த இயக்கமான ஜே.வி.பி.யுடன் சந்திரிகா கரம் கோர்த்துள்ள போது பேச்சுவார்த்தை சமரசத்தீர்வு, அமைதி வாழ்வு, விடியல் என்கின்ற நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளத்திலே பெரும் வேதனையை அது ஏற்படுத்தியுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் இனி யுத்தம் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள். எதிர்வரும்தேர்தலில் சனாதிபதி சந்திரிகாவிற்கு சரியான பாடம் கற்பிப்பார்கள். பிரதமர் ரணில் தமிழர்களோடு உடன்பாடு கொள்ளக்கூடிய உணர்வோடும் தேர்தலைச் சந்திக்கும் அவர் வெற்றியடைவாரென நான் நம்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரை இருள் மூழும்என நான் நினைக்கவில்லை. விடியலே உதயமாகும் என்ற நம்பிக்கை வைகோவிற்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

## கைஎஸ்-மோட்டார் சைக்கிள் பளையில்நேருக்கு நேர் மோதின ஒருவருக்குக் காயம்

பளைப் பகுதியில் நேற்றுமாலை வீதிவிபத்தொன்று இடம்பெற்றது. கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சுப்பர் கப் மோட்டார் சைக்கிளும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த கைஎஸ் வாகனமும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த கரடிப்போக்கு கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தையா வேதநாயகம் என்பவர் காயம் அடைந்துள்ளார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளார். கைஎஸ் வாகனச் சாரதியை பளைக்காவல் பணிமனையினர் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (11)

## யாழ்.இல் முக்கிய சந்திகளிலுள்ள நிலைகளை பலப்படுத்தும் பணியில் படையினர்

(வடமராட்சி)

வடமராட்சியின் பலபகுதிகளிலுமுள்ள சிறிய இராணுவக் காவலரண்களை இரவோடிரவாக மூடிவரும் படையினர் மறுபுறத்தே முக்கிய சந்திப் பகுதிகளிலுள்ள காவலரண்களைப் பலப்படுத்தியும் வருகின்றனர். குறிப்பாக பருத்தித்துறை-கொடிகாமம் வீதி, பருத்தித்துறை-சரசாலைவீதி மற்றும் யாழ்.பருத்தித்துறை வீதிப் பகுதிகளிலுள்ள சிறுகாவலரண்களே இரவோடிரவாக அகற்றப்பட்டன.

நேற்றுமுன்தினமிரவும் நவிண்டில் உள்ளிட்ட சில பகுதிகளில் அமைந்திருந்த சிறுகாவலரண்கள் மூடப்பட்டுள்ளன. அங்கிருந்து எடுத்துச்செல்லப்படும் பனங்குற்றிகள் மற்றும் மண்மூடைகளைக் கொண்டு முக்கிய சந்திப்பகுதிகளில் ஏற்கனவே அமைந்துள்ள காவலரண்கள் புதிதாகப் பலப்படுத்தப்படுகின்றன இதனிடையே நெல்லியடி-மாலுசந்திப்பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள காவலரணுடன் இணைந்ததாக தமது சில காவலரண்களை அமைக்கப் படையினர் மேற்கொண்ட முயற்சி பொதுமக்களது எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது. அப்பகுதியிலுள்ள வர்த்தகர்கள் மற்றும் காணி உரிமையாளரது ஆட்சேபனைகளையடுத்தே அம் முயற்சி கைவிடப்பட்டிருந்த தாகத் தெரியவருகின்றது.

இதனிடையே வல்லைவெளிப் பகுதியை அண்டிய பகுதியில் மீண்டுமொரு முகாம் அமைக்கப் படையினர் முற்பட்டுள்ளனர். நேற்றைய தினம் அப்பகுதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு அப்பகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

### ஆறு...

முஸ்லீம் காங்கிரஸ் தனித்து போட்டியிட முடிவுசெய்துள்ளது. கொழும்பு, கம்பகா, கண்டி, அம்பாறை களுத்துறை ஆகிய இம் மாவட்டங்களில் அடங்குகின்றன. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### கூட்டமைப்பின்..

இந்த நிலையில், அவர்களின் ஆதரவு அரசாங்கம் ஒன்றிற்கு தேவைப்படுமானால் அது நாட்டின் பிரிவினைக்கு மேலும் வலுச் சேர்க்கும் எனவும் சிஹல உறுமய எச்சரித்துள்ளது. (32)

### சனாதிபதி..

திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியமையும் இதற்கு ஒரு உதாரணமாகும்

அமைச்சர் இம்தியாஸ், பாக்கீர் மாக்காரை பதவியில் இருந்து அகற்றி அந்தப் பதவியை டி.எம்.தயாரட்ணவுக்கு வழங்குவதன் மூலம் சனாதிபதி மீண்டும் சிறுபான்மையினருக்கு எதிரான தமது செயற்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளதாக ஏ.எச்.எம். அஸ்வர் கூறினார். இதேவேளை எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி3இல் 2 பெரும்பான்மையுடன் வெற்றிபெறும் என அமைச்சர் ரஜித அபேவர்த்தன தெரிவித்துள்ளார். நேற்று காலி கோட்டையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பங்கேற்ற அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். (32)

### தமிழ்க்..

லில் வேட்பாளர்கள் இடம்பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை எதிர்வரும் பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல்கள் முழுமையாக எதிர்வரும் புதன் கிழமைக்குப் பின்னரே உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (25)

### சனாதிபதியின்..

அரசாங்கத்தின் சார்பில் எவரும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பொது நலவாயநாடுகளின் சங்கம், ஜப்பான் மற்றும் நாடுகளின் உதவியைக் கோரவிருப்பதாகவும் இது தொடர்பில் அரசாங்கம் முறைப்படியான கோரிக்கையை சில தினங்களில் விடுக்கும் என்றும் கூறியுள்ளார்.

உலகில் எந்த நாட்டிலும் இல்லாதவகையில் தனது நாட்டில் சமாதான முயற்சி வெற்றி பெற்று இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஏற்படுவதற்கு எதிராக சனாதிபதியே செயற்பட்டிருப்பதாகவும், அதிகாரம் ஒன்றைத்தவிர வேறு எதனையுமே கருதாது அவரது செயற்பாடுகளால் கூட்டுப் பொறுப் புணர்வுக் கோட்பாடு பெரிதும் கேள்விக்குறியாகியிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் சனாதிபதியின் நம்பகத்தன்மை இழக்கப்பட்டு விட்டதாலும் குறுகிய அரசியல் இலாபங்களை மட்டுமே கருதிய அவரது செயற்பாடுகள் எதிர்காலத்திலும் தொடரும் என்பதாலும் சமாதான முயற்சியை எதிர்காலத்திலும் முன்னெடுப்பதென்பது சாத்தியமற்றது. என்று அரசாங்கத்தின் கருத்து என்றும் கூறியுள்ளார்.

### தேர்தல்...

தாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நேற்று உதவித் தேர்தல் ஆணையாளர்களையும் பிரதேச செயலர்களும் சந்தித்த அவர் இந்த அறிவித்தலை விடுத்தார்.

அத்து மீறல்கள் இடம்பெறும் வாக்கு சாவடிகளின் வாக்குப் பதிவை இரத்துசெய்யும் வகையில் உயர் நீதி மன்றத்தின் ஆணையை தாம் பெற்றுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலின் போது திருப்தியற்ற முறையில் செயலாற்றும் பொலிசார் பணியிலிருந்து நீக்கப்படுவர் என பொலிஸ்மா அதிபர் இந்திராத சில்வா குறிப்பிட்டுள்ளார். (32)

## அத்துமீறிய 5 இந். மீன்பிடிப்படகுகள் சிறி. கடற்படையால் பொறுப்பேற்பு

வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, உள்ளூர் மீனவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களது படகுகள் ஐந்தும் நேற்று இலங்கைக் கடற்படையினரால் கையேற்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நீதவான் க.அரியநாயகம் அவர்களின் பணிப்பின் பேரில் இன்பருட்டி மற்றும் பொலிகண்டி கரையோரப் பகுதிகளில் படையினரின் கண்காணிப்பில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த குறித்த ஐந்து மீன்பிடிப்படகுகளும் மற்றும் மீன்பிடி உபகரணங்களுமே கடற்படையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்திருந்த வேளை உள்ளூர், மீனவர்களாலும் கடற்படையினராலும் கைப்பற்றப்பட்ட 60 இற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களது இழுவைப் படகுகள் மற்றும் சிறு படகுகள் காங்கேசன் துறைக் கடற்படைத்தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் இப்படகுகளும் காங்கேசன் துறை கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே இச்சம்பவத்தில் கைது செய்து யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து இந்திய மீனவர்களுடன் சேர்த்து சுமார் 65 இந்திய மீனவர்கள் அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 16பேர் மீது யாழ். நீதிமன்றில் ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. எனினும் எஞ்சியோர் மீதான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளை எதிர்பார்த்திருப்பதாகத் தெரியவருகின்றது.

## இராணுவம் பொலிசாருடன் நெருங்கிப் பழகியவர் வீட்டில் சாவீட்டுக் கொண்டாட்டம்

(வடமராட்சி)

உயிருடன் இருந்த நபரொருவருக்கு ஊர் மக்கள் ஒன்றுகூடி மரண வீடு கொண்டாடிய சம்பவமொன்று பொலிகண்டிப்பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் இராணுவத்தினருடனும் பொலிசாருடனும் நெருங்கிய உறவுகளை வைத்திருந்ததால் அப்பகுதி மக்கள் அவர் மீது வெறுப்புக்கொண்டிருந்தனர். அத்துடன் பொலிசாருக்கு தவறான தகவல்களை வழங்கி அப்பகுதி மக்களைப் பழிவாங்கி வந்ததாகவும் கூறப்படுகின்றது.

எனினும் பொதுமக்களும் மற்றும் தொடர்புடைய தரப்புக்கள் பலவும் புத்திமதிகளை இவ் வயோதிபருக்கு எடுத்துக் கூறியிருந்தபோதும் அவர் கேட்டுத் திருந்திக்கொள்ளவில்லை. இதனாலேயே இரவோடிரவாக அவரது வீட்டு வளவினை மரண வீடு போன்று மக்கள் அலங்கரித்து மரணவீட்டைக் கொண்டாடினர்.(27)

## தங்காலை சிறையில் கைகலப்பு கைதி ஒருவர் அடித்துக் கொலை

(கொழும்பு)

சிறைக்கைதிகளிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் கைதியொருவர் பலியாகியுள்ளார். இச் சம்பவம் தங்காலை சிறைச்சாலையில் நேற்று முன்தினம் அதிகாலை 4.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

அங்கிருந்த ஏனைய கைதிகளுக்கும் பிரஸ்தாப கைதிகளுக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்து அது கைகலப்பாக மாறியதில் கைதிஒருவர் பலமாக தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவம் ஒன்றில் அண்மையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட கமகே சரத் (வயது-29) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

## இல.க்கு புதிய கடன் திட்டத்தின் கீழ் 200 கோடி ரூபாவை ஈரான் வழங்கும்

(தெஹ்ரான்)

ஈரான் புதிய கடன்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 200 கோடி ரூபாவை வழங்கவுள்ளது.

குறைந்த வட்டியின் அடிப்படையில் வழங்குகின்ற இக் கடனை 10 வருடத்தினுள் இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டும். இரண்டு நாடுகளின் நிதியமைச்சர்கள் அண்மையில் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இவ் உதவி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுழைத்த

**வேலுப்பிள்ளை இளையதம்பி**

(இளைப்பாறிய கல்வித்திணைக்கள ஊழியர்)
உடையார்கட்டு முல்லைத்தீவு.

அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம். அன்னாரின் குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,*
*திருமகள். சி. க. கூ. சங்கம்*
*உடையார் கட்டு வடக்கு.*

(3527)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.